# ALPHA MIND POWER NEWSLETTER



**May 2018**

## *From Guruji's desk....*



My dear Alpha Siddha,
Writing to you with a lot of love and blessings.
May 1st is a day I can never forget. That is the day Alpha Mind Power was born! Yes, on 1st May 2000,

Alpha Mind Power began as a small class with four friends in my house. I started the class as a way to empower my friends with whatever I had learnt on my Spiritual path. Little did I know that it was going to be the beginning of a long journey! And what a great journey, thanks to all Alpha Siddhas!

We have come a long way from that day. Today Alpha Mind Power is not just one class. We had seven levels and two parallel classes. I used to introduce a new class almost every year. That is how we had so many new classes. Every class had its own power and greatness. While beginning every class, there was divine intervention giving me the exact information required for that class. When I look back, it is very clear to me that I am only a tool in the hands of higher energies who have their own divine plan for me, for you, for us.

We started our Rishikesh yatras in 2009. **Amrut Siddhi** and **Srividya** classes were born in 2010 and 2011. Both are classes with very high energy. After Srividya, I felt so complete that I thought there is no need fornew classes anymore. This thought in my mind did not allow me to start any class after that for about 4 years.

Later, in 2015, with the blessings and guidance of Maha Avatar Babaji, I started Shantagni 5 days workshop at Rishikesh. That was a milestone on the path of AMP.

In June 2017, I had the life time opportunity to go to Kailash. Once I came back from there, everything changed in my mind. I felt a great urge to remove the levels in our system so that anyone who had done our basic level could attend all our other classes. I felt this was the need of the hour. The levels disappeared.

The result was the introduction of **Sanjeevani** and then **Aishwaryam** classes. As you all know, those are classes with unique energies of their own. Many of you have attended these classes and are enjoying the results.

As I look back at this wonderful journey, I would also like to remind you about the path that lies ahead, the responsibility that we share.

In 2017, when drought was predicted in Tamilnadu, we did **'Rain Meditation'** and witnessed quite a lot of rain throughout the state, including places like Vellore where rain is scarce.

I wish to remind you at this point that we are a group of very powerful minds. We can create the change that we want not only in our lives but in our country as well.

Let us stop complaining about all the shortcomings. Let us start visualising a wonderful India which is moving on the right path. Include this affirmation at the end of your daily meditation **"India is a wonderful righteous country"**. And we will make it happen.

Wishing you more power, more manifestations and wonderful meditations.

Blessings,
**Srimatha**



*Guruji with Alpha Siddhas at Delhi SANJEEVANI Workshop*



*Guruji with Alpha Siddhas at Mumbai AISHWARYAM Workshop*

என் அருமை ஆல்ஃபா சித்தர்களே,

மிகுந்த அன்புடன் ஆசீர்வாதங்களுடன் எழுதுகிறேன்.

மே மாதம் 1ம் தேதி என்னால் மறக்க முடியாத நாள் ஆகும். அன்று தான் ஆல்ஃபா மைண்ட் பவர் பிறந்தது. ஆம், மே 1ம் தேதி ஆல்ஃபா மைண்ட் பவர் எனது 4 தோழிகளுக்காக துவங்கப் பட்டது. ஆன்மீக பாதையில் எனக்கு கிடைத்த விஷயங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே அந்த வகுப்பை துவங்கினேன். அது ஒரு நீண்ட பயணத்தின் துவக்கம் என்பது அப்பொழுது நான் அறியவில்லை. எப்படிப் பட்ட ஒரு பயணம்... ஆல்ஃபா சித்தர்கள் அனைவருக்கும் தான் நன்றி சொல்ல வேண்டும்.

அதிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோம். இன்று ஆல்ஃபா மைண்ட் பவர் என்பது ஒரே ஒரு வகுப்பு மட்டுமில்லை. ஏழு கட்டங்களும் இரண்டு துணை வகுப்புகளும் இருந்தன. கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய வகுப்பை அறிமுகப் படுத்தினேன். அப்படித்தான் இத்தனை வகுப்புகள் உருவாகின. ஒவ்வொரு வகுப்பிற்கும் அதற்கென்று ஒரு சக்தியும் மகத்துவமும் இருந்தது. ஒவ்வொரு வகுப்பை துவங்கும் பொழுதும் அந்த வகுப்பிற்கு வேண்டிய தகவல்கள் தானாகவே தெய்வ கடாட்சமாக வந்து சேர்ந்தன. திரும்பி பார்க்கும் பொழுது மிகவும் நிதர்சனமாக தெரிகிறது. உயர்ந்த சக்திகளின் கைகளில் நான் ஒரு கருவியாகத்தான் இருந்திருக்கிறேன். அவர்கள் ஏதோ ஒரு திட்டம் வைத்திருந்தார்கள், எனக்கு, உங்களுக்கு, நமக்கு.

நமது ரிஷிகேஷ் யாத்திரை 2009 ஆண்டு துவங்கியது. **அம்ருத சித்தி** மற்றும் **ஸ்ரீவித்யா** வகுப்புகள் முறையே 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் பிறந்தன. இரண்டு வகுப்புகளுமே மிக உயர்வான சக்தி கொண்டவை. ஸ்ரீவித்யா வகுப்பை துவங்கியதும் என் மனமும் ஆத்மாவும் நிறைந்து விட்டது. வாழ்க்கையே முழுமை பெற்று விட்டதாக உணர்ந்தேன். இனி புதிய வகுப்புகள் துவங்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தேன். என் மனதில் இருந்த இந்த எண்ணம் அடுத்த 4 ஆண்டுகளுக்கு புதிய வகுப்பு எதையும் துவங்க விடவில்லை.

பிறகு, 2015-ஆம் ஆண்டில் மஹா அவதார் பாபாஜியின் ஆசியும் வழிகாட்டுதலும் கிடைத்து ரிஷிகேஷில் 5 நாள் சாந்தக்னி வகுப்பு துவங்கினேன். ஆல்ஃபா மைண்ட் பவர் பாதையில் இது ஒரு மைல் கல்லாக அமைந்தது.

2017 ஜூன் மாதம் முதல் முறையாக கைலாஷ் யாத்திரை செல்லும் பாக்கியம் கிடைத்தது. அங்கு சென்று வந்ததும் என் மனதில் மிகப் பெரிய மாற்றங்களை உணர்ந்தேன். நமது வகுப்புகளில் இருந்த கட்டமைப்பை எடுத்து விட வேண்டும். அப்பொழுது தான் முதல் நிலை முடித்தவர்கள் எல்லோரும் எந்த வகுப்பிலும் கலந்து கொள்ள முடியும் என்று எண்ணினேன். இன்றைய தேவை இது தான் என்பது புரிந்தது. கட்டங்கள் மறைந்தன.

இதன் காரணமாக **சஞ்சீவனி** மற்றும் **ஐஸ்வர்யம்** வகுப்புகள் அறிமுகமாயின. அந்த வகுப்புகள் ஒவ்வொன்றும் ஒரு தனித்தன்மையான சக்தியை பெற்றவை என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களில் பலர் அந்த வகுப்புகளில் கலந்து கொண்டு பலனை அனுபவித்து வருகிறீர்கள்.

கடந்து வந்த இந்த பாதையை திரும்பி பார்க்கும் அதே நேரத்தில், நம் முன்னால் நீண்டிருக்கும் பாதையை பற்றியும் நினைவூட்ட விரும்புகிறேன். நமக்கு இருக்கும் பொறுப்பை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

2017 ஆண்டில் தமிழ்நாட்டில் வறட்சி நிலவும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட பொழுது நாம் **‘மழை தியானம்’** செய்தோம். வேலூர் போன்ற வறண்ட பகுதிகள் உட்படமாநிலம் முழுவதும் நல்ல மழை கண்டோம்.

இந்த நேரத்தில் ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். நாம் மனோசக்தி மிகுந்த ஒரு கூட்டமாக இருக்கிறோம். நம் வாழ்வில் மட்டுமின்றி நம் நாட்டிலும் நாம் விரும்பும் மாற்றங்களை நம்மால் நிகழ செய்ய முடியும்.

குறை கூறுவதை நிறுத்துவோம். சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும் ஒரு சிறப்பான இந்தியாவை தியானத்தில் காணத் துவங்குவோம். உங்களது அன்றாட தியானத்தின் கடைசியில் இந்த வாக்கியத்தை கூறி வாருங்கள் **‘இந்தியா ஒரு அற்புதமான, நேர்மையான நாடு’**. அதை நாம் உருவாக்கி காட்டுவோம்.

அதிகமான சக்தியுடன் உங்கள் இலட்சியங்கள் நிறைவேறட்டும், உங்கள் தியானங்கள் சிறக்கட்டும்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**



**ANNOUNCEMENT**

**‘MANAME NALAMA’**
GURUJI’S PROGRAM ON POTHIGAI TV !
8.15 am Monday to Friday
You can also watch from mobile app **‘DD POTHIGAI LIVE’**

அறிவிப்பு

**மனமே நலமா**

பொதுகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 8.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை
மொபைல் ஆப் **‘DD POTHIGAI LIVE’** மூலமும் காணலாம்.

One of our neighbors was not in talking terms for long time. I spoke to her sub conscious mind for 3-4 days. This morning I was walking to bus stand for my office cab and someone asked me if I wanted lift. It was her and she was all smiles. It is a miracle that what did not work for 2-3 years cleared in 4 days. Thank you Guruji and Alpha!

**Nalini**




எங்களது பக்கத்து வீட்டு பெண் எங்களுடன் பல நாட்களாக பேசுவதே இல்லை. அவரது ஆழ்மனதுடன் 3-4 நாட்களுக்கு பேசினேன். இன்று காலை ஆபீஸ் டாக்சியை பிடிக்க நடந்து சென்று கொண்டிருந்தேன். லிப்ட் வேண்டுமா என்று யாரோ கேட்டார்கள். பார்த்தால், அந்த பெண் தான். முகத்தில் ஒரே புன் சிரிப்பு. 2-3 வருடங்களாக இருந்த பிரச்சினை 4 நாட்களில் முடிந்து விட்டது ஒரு அதிசயம் தான். நன்றி குருஜி நன்றி ஆல்ஃபா! **நளினி**

As I am a senior citizen, I used to visit the family doctor once in a month or so. But after doing **Sanjeevani** in November 2017...there is a remarkable improvement ... I have not visited my doctor since December. Recently the day before the **Aishwaryam** workshop.... I had a stye in my right eye.. very painful...next day was the workshop so I did not have time to go to the doctor. I listened to Sanjeevani meditation twice.... the pain just subsided the next day and disappeared the third day.. thank you Alpha and Guruji.

I had taken **Alpha Music Therapy** from Guruji. I was regularly watching a tv program which no one in my house likes! But I was watching it for the past 2/3 years... suddenly I completely stopped watching that t v program which made everyone (including me) happy. I was just thinking how this happened....i got the answer .yes...music therapy reprograms the mind. Thank you Srimatha!

**Viji Raja, Mumbai**

For a while now I have been wanting to contribute to the finances in my family but didn't know how as I don't work and never have. Something was stopping me and I didn't know what. But during the **Aishwaryam** workshop as guided by Guruma, the reason flashed and hopefully I have burnt all the negativity and now I feel very confident that I will choose the correct work and will be successful in it. Thank you Guruji ! **Geetikka Edwin, Mumbai**

I attended **Tejas chakra** in March at Chennai this year.. - I had a bad fall in December last year and my right hand was always throbbing with pain. Although there was no fracture yet the pain was always there. I could not do my normal chores. Last week, I decided to try cell glow to that particular part. What a miracle.. the throbbing pain stopped from the next day. Thank you Guruji and Alpha!

**Meenakshi Kuppuswamy, Mumbai**

I attended **Sanjeevani** class a few months back in Coimbatore and do the meditation everyday. Now my BP, sugar all normal. I feel energetic. Am able to walk without leg pain. Thanks Guruji! **Lalithakumari**

I am a working woman. Managing my time between the house work and office work was becoming almost impossible. My energy level was always down and health problems were cropping up every now and then. I attended **Sanjeevani** and started listening to the meditation every night. After a few weeks I am surprised to find myself getting up in the morning with very good energy. My health is actually very good these days. I can see myself smiling often. All credit to Srimatha and Alpha! **Janaki**

வயதின் காரணமாக மாதம் ஒருமுறையேனும் டாக்டரை பார்க்க போவேன். பிறகு நவம்பர் மாதம் சஞ்சீவனி வகுப்பில் கலந்து கொண்டேன். மிகப் பெரிய மாற்றம் தெரிந்தது. டிசம்பர் மாதம் முதல் நான் டாக்டரை பார்க்கவேயில்லை. சமீபத்தில் என் கண்ணில் ஒரு கட்டி வந்தது. மிகவும் வலித்தது. டாக்டரை பார்க்க முடியவில்லை. சஞ்சீவனி தியானம் இரு முறை கேட்டேன். வலி அப்படியே குறைந்து விட்டது அடுத்த நாள் மறைந்தே விட்டது. நன்றி ஆல்ஃபா!

சமீபத்தில் குருஜியிடமிருந்து **ஆல்ஃபா மியுசிக் தெரபி** பெற்று கேட்டேன். நான் தொடர்ந்து ஒரு டிவி நிகழ்ச்சியை பார்த்து வந்தேன். எனது வீட்டில் யாருக்கும் அது பிடிக்காது. ஆனால் 2-3 வருடங்களாக அதை பார்த்து வந்தேன். திடீரென்று அந்த நிகழ்ச்சியை பார்ப்பதை நிறுத்தி விட்டேன். எல்லோருக்குமே சந்தோஷம். நான் யோசித்தேன்.. இது எப்படி நடந்தது.... பதில் கிடைத்து விட்டது. மியுசிக் தெரபி உண்மையாகவே மனதை முழுவதும் மாற்றி விடுகிறது. நன்றி ஸ்ரீமாதா!

**விஜி ராஜா, மும்பை**

பல நாட்களாகவே சம்பாதிக்க வேண்டும். குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு நானும் எனது பங்கை செலுத்த வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. ஆனால் அதை எப்படி செய்வது என்று தெரியவில்லை. நான் வேலைக்கு சென்றதே இல்லை. ஏதோ ஒன்று என்னை தடுத்தது. ஆனால் ஐஸ்வர்யம் வகுப்பில் குருஜியின் முன்னிலையில் காரணம் என் மனதில் பளிச்சென்று தெரிந்தது. அதை எல்லாம் தியானத்தில் எரித்து விட்டேன். இப்பொழுது நிச்சயம் ஒரு நல்ல வேலை கிடைத்து அதில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. நன்றி குருஜி!

**கீத்திக்கா எட்வின், மும்பை**

மார்ச் மாதத்தில் சென்னையில் **தேஜஸ் சக்ரா** வகுப்பில் கலந்து கொண்டேன். சென்ற டிசம்பர் மாதத்தில் கீழே விழுந்து விட்டேன். வலது கையில் எப்பொழுதும் வலி இருந்து கொண்டே இருந்தது. எலும்பு முறிவு இல்லையென்றாலும் வலி இருந்து வந்தது. எனது அன்றாட வேலைகளை என்னால் சரிவர செய்ய முடியவில்லை. சென்ற வாரம், செல் ஒளி தியானம் செய்து கையில் அந்த இடத்தில் சக்தியை பாய செய்தேன். வலி நின்று விட்டது. நன்றி ஆல்ஃபா! **மீனாக்ஷி குப்புசாமி, மும்பை**

நான் கோவையில் சில மாதங்களுக்கு முன்பு **சஞ்சீவனி** வகுப்பில் கலந்து கொண்டு தினமும் தியானம் செய்கிறேன். இப்பொழுது எனது BP, sugar எல்லாம் நார்மலாக இருக்கிறது. மிகவும் தென்பாகவும் இருக்கிறேன். கால் வலியின்றி நடக்கிறேன். நன்றி குருஜி! **லலிதகுமாரி**

நான் வேலைக்குப் போகும் பெண். வீட்டு வேலைகளையும் பார்த்துக் கொண்டு அலுவலகத்துக்கும் போய் வருவதில் எனது நேரத்தை பகிர்வது உள்ளபடியே முடியவில்லை. எனது சக்தி மிகவும் குறைவாகவே இருந்தது. உடல் நிலையும் அடிக்கடி தொந்திரவு கொடுத்தது. **சஞ்சீவனி** வகுப்பில் கலந்து கொண்டேன். அந்த தியானத்தை தினமும் இரவில் கேட்டு வந்தேன். சில வாரங்கள் கழித்து அதிசயத்துடன் பார்க்கிறேன். காலையில் நல்ல தெம்புடன் எழுகிறேன். எனது ஆரோக்கியமும் இப்பொழுது நன்றாக இருக்கிறது. என் முகத்தில் அடிக்கடி புன்சிரிப்பு தவழ்கிறது. எல்லா புகழும் ஸ்ரீமாதாவுக்கும் ஆல்ஃபாவுக்குமே உரித்தாகும். **ஜானகி**

## ONLINE PAYMENT

You can now download mobile app INNOTYM to make any payments to AMP for workshops or products.
You can also pay through our website Payment Gateway

## ஆன்லைன் கட்டணம்

INNOTYM ஆப் உங்கள் மொபைலில் பதிவிரக்கம் செய்து AMP வகுப்புகள் அல்லது பொருட்களுக்கு சுலபமாக கட்டணம் செலுத்தலாம்.
நமது இணையதளத்தின் மூலமாகவும் கட்டணம் செலுத்தலாம்.

## Workshops Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Madurai (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 05/05/18 06/05/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Poppys,Airport Ring Road, Mattuthavani, Madurai |
| Salem (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 12/05/18 13/05/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel CJ Pallazzio, 201/6, Junction Main Road, [Near NH-7] Salem – 636005 |
| Chennai (Tamil) | **TEJAS CHAKRA KUNDALINI SHAKTHI** Level – 1 | 01/06/18 02/06/18 03/06/18 | Fri Sat Sun | 9am to 5pm 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Bangalore (English) | **SPIRITUAL COUNSELING SPIRITUAL COUNSELING** | 09/06/18 10/06/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | The Fern Citadel, #41,Sheshadri Road, Anand Rao Circle, Bengaluru – 560 009 |
| Chennai (Tamil) | **AISHWARYAM** | 17/06/18 | Sun | 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | **TEJAS CHAKRA SRIVIDYA** Level – 1 | 22/06/18 23/06/18 24/06/18 | Fri Sat Sun | 9am to 5pm 9am to 5pm 9am to 5pm | Hotel Grand Regent , 708, Avinashi Road, Coimbatore |
| Chennai (Tamil) | **SPIRITUAL COUNSELING SPIRITUAL COUNSELING** | 30/06/18 01/07/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Srimatha Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*